மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, தற்போது ஆக்கிரமிப்பு செய்திருக்கிறவருடைய, பெயர் சுடலைமாட நாடார் என்பது. 1.34 ஏக்கர் நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்ததன் காரணமாக வருவாய்த்துறை மூலமாக சர்வேயர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

Specific research for agro-ecological findings.

*Q. No. 454— Thiru SALEM M. ARUMUGAM ; Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state :

(a) whether there is any proposal to conduct location Specific Research for agro-ecological findings in this State with the financial assistance from the International Bank of Reconstruction and Development ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் மூலம் உலக வங்கி நிதி உதவியுடன் வேளாண்மை மண் அமைப்புப் பற்றித் தனி சிறப்பு ஆராய்ச்சி (Location specific research for agro-ecological findings) நடத்துவதற்கான செயற்குறிப்பு ஒன்று தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் தயாரிக்கப்பட்டு, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக-பன்னாட்டு புனரமைப்பு மற்றும் வளர்ச்சி வங்கி இணைந்த குழு (ICAR-IBRD Inter disciplinary scientific panel) லின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. நாளாவட்டத்தில் அக்குழுவின் கூட்டம் நடந்து அதன் முடிவுகள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்திற்கு தெரிவிக்கப்படும். மேற்படி செயற்குறிப்பு ஒப்புதல் பெற்றால் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் திட்டம் செயல் படுத்தப்படலாம்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : துணைத்தலைவர் அவர்களே, தற்பொழுது அமைச்சர் அவர்கள் அறிவித்த பன்னாட்டு வேளாண்மை மண் வளப் பரிசோதனை ஆராய்ச்சியின் முடிவும் தமிழக மண் வளப் பரிசோதனை ஆராய்ச்சியின் முடிவும் ஒருமைப்பாட்டுடன்

1979 மார்ச் 17]

இருக்கிறதா அல்லது இரண்டிற்கும் முரண்பாடுகள் இருக்கின்றன வா ? அப்படியென்றால் அந்த முரண்பாடுகளைப் போக்குவ தற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இதனால் வேளாண்மைத் துறையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி என்ன?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, It is a location for Specific Research for agro-ecological findings. அவர்கள் செய்வது. ஆனால் நம்மிடத்திலே நடைபெற்று வருவது சாயில் கன்சர்வேஷன் ஸ்கீம். ஆகவே அதற்கும் இதற்கும் வித்தியாசம் இருக்கிறது. அவைகளை யெல்லாம் பரிசீலனை செய்து வேளாண்மை பல்கலைக் கழகம் விவரமான அறிக்கையைக் கொடுக்க இருக்கிறது.

[முற்பகல் 10–40]

திரு. எச். ஜி. ஆறுமுகம்: பேரவைத் துணைத் தலைவரவர் களே, பன்னாட்டு புனரமைப்பு மற்றும் வளர்ச்சி வங்கிக்குழு வின் நிதி உதவியுடன் தர்மபுரி மாவட்டத்தில் ஒரு ஆராய்ச்சிக் கழகம் ஏற்படும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதிலிலேயே சொல்லியிருக்கிறேன். இதுவே பரிசீலனையில் இருந்து வரு கிறது என்று. இது தர்மபுரி மாவட்டத்திற்கு என்று தனியாகப் பரிசீலனை செய்யப்படும்.

வடாற்காடு மாவட்டத்தில் நீர் ஊற்றுக்கள் பாதிக்கப்படுதல்.

வினா எண் 455.— திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வடாற்காடு மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழில் சாலைகளினால் நீர் ஊற்றுக்கள் பாதிக்கப்பட்டு Water Pollution ஏற்படுவதைத் தடுக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: ஆம்.